**Tiaano®** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2013-2014

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jan. 14 : 736 Nos.
  - Up to Dec. 13 : 732 Nos.
- **Performance Dec. 13 ...**
  - Turnover growth : 10.25 %
  - Employment growth : 1.3 %
  - 100% Attendance : 15.03 %

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## பொய்

கருப்பென்றும், சிவப்பென்றும், வெள்ளையென்றும் நிறத்தின் அடிப்படையில் பொய்கள் வேறு பிரிக்கப்படுகின்றன, அல்லவா? பொய் பொய்தான்! அதில் மாற்றமில்லை! "தீமை செய்யாத பொய்கள்" என்ற பெயரில், சில பொய்களை நியாயப் படுத்த அல்லது மன்னித்துவிட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அகராதியில் அவைகளுக்கு விளக்கங்களும் கொடுக்கப்படுகின்றன. 'நல்லெண்ணத்தால் சொல்லப்பட்ட பொய்', 'தீங்கு விளைவிக்காத மோசடி' — இப்படி இன்னும் சில விளக்கங்கள் அதற்கு உண்டு, ஆனால் இந்த விளக்கங்கள் சரியானவை அல்ல.

பல சந்தர்ப்பங்களில், நமக்கு சாதகமாக வார்த்தைகளைப் புரட்டி நாம் பெரிய காரியங்களை சாதித்துவிட்டதாகவும் நம்மை பெரியவர்களென்றும் மற்றவர்களுக்கு முன்பாகக் காட்டிக் கொள்கிறோம். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் முற்றிலும் மாறான கதையை சொல்ல வேண்டிய நிலை நமக்கு ஏற்படுகிறது. சில வேளை நாம் செய்யாத காரியங்களை நாம் சாதித்ததாகவே பிறரிடம் சொல்லி பாராட்டுகளையும் பெற்றுக்கொள்கிறோம். இத்தகைய உண்மைக்குப் புறம்பான நேர்மையற்ற செயல்கள் ஆண்டவரை வெறுப்படையச்செய்கின்றன. போலி கௌரவத்தையும் மற்றவர்களின் பாராட்டுகளையும் விரும்பி கட்டுக் கதைகளை உருவாக்குவோமெனில் அந்த தவறுதல்களுக்காக பிற்காலத்தில் நாம் வருந்த நேரிடும்.

பயங்கரமான மிருகங்களும் ஊர்ந்து செல்லும் பாம்புகளும், அழகிய பறவைகளும் வாழ்கின்ற ஓர் இருண்ட காட்டிற்கு சிறிது நேரம் உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். ஓர் அடர்த்தியான காடு! இளங்காலைப் பொழுது கொண்டைச் சேவலொன்று மரத்தின் உச்சியிலிருந்து கூவுகிறது."ஆண்டவனின் படைப்பில் இது ஓர் அழகிய நாள்" என்று கொக்கரித்து இறைவனைத் துதிக்கிறது கீழே ஒரு நரி மிகுந்த பசியுடன் இரைதேடி வந்து கொண்டிருக்கிறது. 'இன்று நான் பசியாற எனக்கு உணவு கிடைக்குமா?' என்ற கேள்விக் குறியோடு, "ஆண்டவரே, இன்று எனக்குரிய ஆகாரத்தைத் தாரும்." என்று ஜெபித்துக்கொண்டே மேல் நோக்கிப் பார்த்து அங்கே மரத்தின் உச்சியில் நின்று கூவிக்கொண்டிருந்த சேவலைக் கண்டு நரி ஆச்சரியப்பட்டது.

உடனே நரி சேவலை பார்த்து, "நண்பனே, காலை வணக்கம்! நீ எப்படி இருக்கிறாய்?" என்றது. அதற்கு சேவல், "என் சிநேகிதனே, உனக்கு என் காலை வணக்கம். நான் நலமுடன் இருக்கிறேன்" என்று பதிலளித்தது. அப்பொழுது நரி 'நான் அனுதினமும் உன்னை வாழ்த்துகிறேன். ஆனால் நீ ஒரு நாளும் கீழிறங்கி வந்து என்னை வாழ்த்தியதே இல்லை. நண்பனே! நான் உனக்கு முத்தம் கொடுக்க விரும்புகிறேன். நீயும் எனக்கு முத்தம் கொடுப்பாயா? இந்த அழகிய காலைப் பொழுதில் நீ ஏன் கீழிறங்கி வந்து என்னை முத்தமிடக்கூடாதா?' என்று சேவலைக் கேட்டுக்கொண்டது. நரியின் வார்த்தையைக் கேட்ட சேவல் "நண்பனே! கீழே இறங்கி வருவதற்கு எனக்கு ஆசைதான். ஆனால் சிலர் எனக்கு முத்தம் கொடுக்கிறேன் என்று சொல்லி என் தலையை உடலிலிருந்து எடுத்துவிடுவார்கள். எனவே நான் இங்கேயே இருந்து வானத்தை நோக்கி ஆதவனைக் கண்டு மகிழ்கிறேன்' என்றது.

உடனே நரி, "நீ அப்படி சொல்வது சரியல்ல! நேற்றுதானே மிருகங்கள், பறவைகள் அனைவரின் தலைவர்களும் ஒன்றுகூடி, 'ஒருவரையொருவர் கொல்லக் கூடாது என்றும், ஒருவருக்கொருவர் எந்த தீங்கும் செய்யக்கூடாது என்றும் யாவரும் சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும் வாழ வேண்டுமென்றும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுருக்கின்றன" என்று கூறியது. அதற்கு சேவல், "நண்பனே! இது

Contd...2

## FUNCTIONAL WISHES



CANDLEMAS DAY
2nd FEBUARY



MAHASHIVARATIRI
27th FEBUARY

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel:22294565 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. C. SOUNDER SURESH** **02nd Feb.**
Purchase



**Miss. P. NIRMALA DEVI** **25th Feb.**
Purchase

**Best Wishes from Tiaano Employees**



Stand up, be Bold, be Strong.
Take the whole Responsibility on your own Shoulders,
and know that you are the creator of your own Destiny.
All the Strength and Succor you want is within yourselves.
Therefore, make your own Future.

- **SwamiVivekananda**

மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதே, இதை நான் இன்று வரையும் கேள்விப்படவில்லையே" என்றது. இப்படிச் சொல்லும்போதே, சேவல் தன்னுடைய தலையை உயர்த்தி தூரத்தில் எதையோ பார்த்தது. அதனை கவனித்த நரி, 'நண்பனே, என்ன அப்படி கூர்ந்து பார்க்கிறாய்?' என்று கேட்டது. அதற்கு சேவல் 'வேறொன்றுமில்லை! அதோ ஒரு மைல் தூரத்தில் ஏராளமான காட்டு நாய்கள் இத்திசை நோக்கி வேகமாக ஓடிவருகின்றன. ஓடும் வேகத்தில் தூசி கிளம்புகிறதைப் பார்க்கிறேன். உண்மையாகவே அவை எதையோ துரத்திக் கொண்டுதான் வருகின்றன' என்றது. சேவல் கூறியதைக் கேட்ட நரி அதிர்ச்சியடைந்தது. தன் உயிர் தப்ப வாலைச் சுருட்டிக் கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தது. அப்பொழுது சேவல் நரியைப் பார்த்து, "நண்பனே! நேற்று கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் பற்றி நீ கேள்விப்படவில்லையா? அவைகள் உன்னை ஒன்றும் செய்யாது" என்றது கலங்கி போயிருந்த நரி, "எனக்கு அந்த ஒப்பந்தம் பற்றி தெரியும்! அந்த இரகசிய ஒப்பந்தத்தை இந்தக் காட்டு நாய்கள் கேள்விப்படாமல் இருந்தால்? ஐயோ நான் தொலைந்தேன்," என்று சொல்லி பதட்டத்துடன் ஓடி மறைந்தது. நரியின் நாவில் பொய்யே நிறைந்திருந்தது. இதை சோதித்தறிந்ததினால் சேவல் உயிர்தப்பியது! நாம் அடியெடுத்து வைத்திருக்கின்ற 2014 –ம் ஆண்டில் நாமும் உண்மையுள்ளவர்களாக எண்ணிய யாவையும் பெற்று, வெற்றி மலர்ந்திட அன்பும், வளமும், நல்ல ஒளிமயமான ஆண்டாக அமைய உங்கள் அனைவரையும் Tiaano குடும்பத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

மாவீரன் அலெக்ஸ்சாண்டரிடம் ஒரு ஞானி சொன்னார், "உன் மொத்த சாம்ராஜ்யத்தின் மதிப்பு இருபது காசுகள். அலெக்ஸ்சாண்டருக்குக் கோபம் வந்தது. ஞானி கேட்டார். "ஒரு பாலைவனத்தில் மரண தாகத்தோடு அலைகிறாய். நான் ஒரு குவளை தண்ணீர் கொடுத்து, அதற்கு பதிலாக பாதி சாம்ராஜ்யம் கேட்டால் தருவாயல்லவா? தருவேன்" என்றார் அலெக்ஸ்சாண்டர்…

ஞானி சொன்னார், "ஒரு குவளை தண்ணீரின் மதிப்பு பத்து காசுகள். அதனால் தான் சொன்னேன் உன் மொத்த சாம்ராஜ்யத்தின் மதிப்பு இருபது காசுகள்".

மண்ணை வெல்வது பெரியது.

தன்னை வெல்வது அதனினும் பெரியது.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### உண்மையான பிராத்தனை

நூற்றுக்கணக்கானோர் பயணம் செய்த கப்பல் நடுக்கடலில் கவிழ்ந்ததில் இருவர் மட்டுமே உயிர் பிழைத்து ஒரு தீவில் ஒதுங்கினார்கள். அங்கே மனித நடமாட்டமே இல்லை. குடிக்கத்தண்ணீர் இல்லை. உண்ண உணவு எதுவும் இல்லை. ஒதுங்க ஒரு நல்ல இடமும் இல்லை. கடுமையாக அலைந்து ஒன்றும் பயனில்லாது போகவே இருவரும் பிராத்தனை செய்தனர். ஒருவன் கடவுளிடம் வெகுநேரம் பிராத்தனை செய்தான். மற்றொருவனோ ஒரே நிமிடத்தில் தனது பிராத்தனையை முடித்துக் கொண்டான். பிராத்தனை முடிந்து அவர்கள் சிறிது தூரம் நடந்தபோது அங்கே நீரூற்று தென்பட்டது.

தாகம் தீர அதில் அவர்கள் தண்ணீர் பருகினார்கள். இப்போது பசி வந்து காதை அடைத்தது. மீண்டும் கடவுளிடம் பிராத்தனை செய்தார்கள். இப்போதும் ஒருவன் மட்டும் நீண்ட நேரம் பிராத்தனை செய்ய மற்றொருவன் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் ஒரு பழ மரத்தைக் கண்டு ஆவலுடன் பழங்களைத் தின்று பசியாறினார்கள்.

Contd…3

## தெரிந்து கொள்வோம்

- ❖ ஹரிக்கேன் என அழைக்கப்படும் சூறாவளி புயலானது, ஒரு மெகாடன் வெடிகுண்டைப்போல 8,000மடங்கு நிகரான ஆற்றலை உருவாக்குகிறது.
- ❖ டால்பின்கள் கடலில் நீந்தினாலும், நீரை குடிப்பதில்லை. கடல் நீரை அவைகள் குடிக்குமானால், நோய்வாய்பட்டு உயிரிழக்க நேரிடும். தாங்கள் உண்கின்ற உணவுகளின் வழியாக தங்களது திரவ தேவைகளை இவைகள் பெறுகின்றன.
- ❖ மனிதன் உயிரோடு இருக்கும்போது, மனிதனின் மூளையின் நிறம் இளஞ்சிவப்பாக இருக்கும். இறக்கும்போது அது நிறம் மாறி சாம்பல் நிறத்துக்கு மாறிவிடும்.
- ❖ துருவ கரடிகள் வியப்பூட்டும் உயிரினமாகும். இவற்றின் அடர்த்தியான மேல் தோலானது, பலர் நினைப்பதைப்போல வெண்மை நிறத்தில் இருப்பதில்லை. அது கருப்பு நிறத்திலானது, இதன் ரோமங்களின் நிறமும் வெண்மையாக இருப்பதில்லை ஒளி ஊடுருவுகின்ற தன்மை கொண்டவை.
- ❖ ஃபின்லாந்தில் உள்ள ஒரு ஃபைன் மரத்தின் வேர்களது, வேர்களை ஒருங்கிணைத்து அதன் நீளத்தை கணக்கிட்டால் அது 30 மைல்களுக்கும் அதிகமாக இருக்கும்.
- ❖ சைக்கிள் ஓட்டும் வேகத்தில் நிறுவப்பட்ட சாதனை அளவானது, ஒரு மணிக்கு 166.94 மைல் தூரமாகும். இதை சாதித்தவர் ஃபிரெட் ரோம்பெல்பெர்க்.
- ❖ கொட்டாவி அல்லது கொட்டாவி (Yawn அல்லது Yawning விடுவது) என்ற சொற்றொடரை வாசிக்கின்ற நபர்கள் பலருக்கு கொட்டாவி விடுகின்ற உணர்வு ஏற்படத்தொடங்கும்.
- ❖ ஒரு வண்ணத்துப்பூச்சி பறப்பதற்கு அதன் உடல் வெப்பநிலையானது, 86 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் குறைவில்லாமல் இருக்கவேண்டும்.
- ❖ உலகில், மிக அதிகளவு பால் உற்பத்தி செய்யும் நாடாக இருப்பது நமது தாய்நாடான இந்தியாவாகும்.
- ❖ தலை நிறைய முடி வைத்துள்ள சராசரி மனிதருக்கு 85,000லிருந்து 1,50,000 வரை முடிகள் இருக்கும்.
- ❖ துப்பாக்கி குண்டு துளைக்காத புல்லட் புரூஃப் வெஸ்ட் மற்றும் காரில் பயன்படுத்துகின்ற வின்ட்ஷீல்டு பிளேடுகளை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் பெண்கள்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

அந்தத் தீவில் வாழ வழியில்லை என்பதை உணர்ந்து மறுபடியும் அந்தத் தீவிலிருந்து வெளியேறி ஊர் போய்ச் சேர வேண்டும் என்று இருவரும் இறைவனை பிராத்தித்தார்கள். வழக்கம்போல ஒருவன் மட்டும் நீண்ட நேரம் பிராத்தனை செய்ய மற்றொருவன் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொண்டான்.

என்ன ஆச்சரியம். அப்போது, அத்தீவின் பக்கம் ஒரு கப்பல் வந்தது. இவர்கள் கூச்சல் போட்டதும் கப்பலில் இருந்தவர்கள் இவர்களைக் கவனித்து, வந்து இருவரையும் கப்பலுக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது நீண்ட நேரம் பிராத்தனை செய்தவனின் மனதில் ஒரு வஞ்சக எண்ணம் உருவானது. அவன் கப்பலில் ஏற கூடாது என்று தடுத்தான்.

ஏன் என்று அனைவரும் கேட்க அவன் சொன்னான், "ஒவ்வொரு முறையும் நான் நீண்ட நேரம் வேண்டி உருகிக் கடவுளை வழிபட்டு ஒவ்வொன்றையும் அடைந்தேன். இவனோ பேருக்குப் பிராத்தனை செய்தவன். இவனுக்கு இந்த பலனை அடையத் தகுதியில்லை, "அப்போது வானிலிருந்து ஒரு அசரீரி கேட்டது, "மூடனே, உன்னால்தான் எல்லாம் நடந்தது என்று நீ நினைக்கிறாய். ஆனால் உண்மையில் உன் நண்பனின் பிராத்தனைக்குத்தான் எல்லாமே கிடைத்தது. ஒரு நிமிடம் தான் வேண்டினாலும் அவன் என்ன வேண்டினான் தெரியுமா? 'கடவுளே, என் நண்பன் கேட்கும் உதவிகளை எல்லாம் செய்து கொடுங்கள், 'என்பதுதான்.

அவனுடைய உண்மையான பிராத்தனைக்கு செவி சாய்த்துத்தான் நான் எல்லா உதவிகளையும் செய்தேன், "முதலாமவன் வெட்கித் தலை குனிந்து தன் நண்பனிடம் மன்னிப்புக் கோரினான். பின் கடவுளுக்கு நன்றி கூறி நீண்ட நேரம் பிராத்தனை செய்தான். மற்றொருவன் வழக்கம்போல ஒரு நிமிடம் பிராத்தனை செய்துவிட்டு தன் வேலையைப் பார்க்கப்போனான்.

Compiled By : Mrs. S. Sahaya Pani Shiny
Project

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XXVI)

### 8. பூனை அவசியமா?

சாமியார் ஒருவர், ஆசையாக ஒரு பூனை வளர்த்துக் கொண்டிருந்தார். நாள்முழுவதும் அவரோடு பாசமாகக் கொஞ்சி விளையாடுகின்ற அந்தப் பூனை, அவர் தமது சிஷ்யர்களுக்கு வகுப்பு எடுக்கும் நேரத்திலும் அவரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

பூனைமீது சாமியாருக்கு அளவற்ற பாசம் உண்டு. என்றாலும், இதனால் வகுப்பு தடைப்படுகிறது. சிஷ்யர்கள் கவனம் சிதறுகிறார்கள் என்று எண்ணிய அவர், பூனையைப் பிடித்து ஒரு தூணில் கட்டிப்போட்டு விட்டார்.

அதன்பிறகு, ஒவ்வொருமுறை பாடம் தொடங்கும்போதும், பூனை தூணில் கட்டப்பட்டது. சிஷ்யர்கள் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் பாடத்தில் கவனம் செலுத்தினார்கள்.

சில வருஷங்களுக்குப்பின் சாமியார் இறந்து விட்டார். அவரை பிரிந்த துக்கம் தாளாமல் சில நாட்களுக்குள் அந்தப் பூனையும் இறந்துவிட்டது.

இறந்த சாமியாருக்குப் பதிலாக அவருடைய பிரதான சிஷ்யர் ஒருவரைத் தலைமைச் சாமியாராக நியமித்தார்கள். அவரும் பூஜைகள் செய்வது, சிஷ்யர்களுக்குப் பாடம் நடத்துவது என்று வழக்கமான ஆசிரமப் பணிகளை தொடர்ந்தார்.

புதிய சாமியாரின் முதலாவது வகுப்பு. மாணவர்கள் எல்லாரும் வரிசையாக வந்து உட்கார்ந்தார்கள். ஆனால், அவர்களைக் கவனிக்காமல் ஓரமாக இருந்த தூணையே வெறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சாமியார்.

Contd…4

## கவிதைகள்

### ஒற்றுமை

பகலை கொள்ளையடிக்கும்
இரவிடமும்...
இரவில் வெள்ளையடிக்கும்
பகலிடமும்...
ஒற்றை ஒற்றை
துளியாய் வீழ்ந்து
பள்ளத்தை நிரப்பும்
மழையிடமும்...
ஓடி...ஓடி...
வந்து
மரத்தை வளைக்கும்
காற்றிடமும்...
கூடி...கூடி...
வந்து
கரையை உடைக்கும்
அலையிடமும்...
சேர்ந்து சேர்ந்து
கருப்பு வானவில்லாய்
சிறகு விரிக்கும்
சிட்டுகளிடமும்...
ஒன்று ஒன்றாய்
வந்து
வானில் அழகை ஜனிக்கும்
நட்சத்திரங்களிடமும்...
கற்றுக்கொள்...
கற்றுக்கொள்...
ஒற்றுமையை...
ஒற்றுமையை...

Compiled By : Miss. P. Sakthi Priya
Project

## சிந்தனைக்கு

"வாழ்க்கை சிறப்பானதாக இருக்குமென நம்பிக்கையோடு இருப்பது நல்லது. அதே வேளையில் மோசமானவற்றை எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருப்பதும் நல்லது."

### உத்வேகமளிக்கும் மந்திரம்

துணிவோடு செயல்படாத காரணத்தால் உலகில் பல திறமைகள் சிதறிப் போகின்றன.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும்** பணியாளர்களின்
குடும்பத்தாரிடமிருந்து **கவிதைகள்,**
**கட்டுரைகள்,கதைகள் வரவேற்கப்படுகிறது**
**– Editor**

'சுவாமி, என்ன ஆச்சு? ஏன் இப்படிக் கோபமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று விசாரித்தார் சிஷ்யர்.

பாடம் நடக்கும் போது தூணில் ஒரு பூனை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று எரிந்து விழுந்தார் சாமியார். உடனடியாக எங்கிருந்தாவது ஒரு பூனையைப் பிடித்துக்கொண்டு வந்து அங்கே கட்டுங்கள். இல்லாவிட்டால் இன்றைக்குப் பாடம் நடக்காது!

'Procedures' எனப்படும் வழிமுறைகளின் உண்மையான நோக்கம்–அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டால், இப்படித்தான் சில அபத்தங்கள் நேர்ந்துவிடுகின்றன.

இப்படிக் காரணமே இல்லாமல் சில பழைய வழிமுறைகளைப் பிடித்துக்கொண்டு தொங்குவதால், தனிமனிதர்களின் வாழ்க்கையிலும் சரி, பெரிய நிறுவனங்களிலும் சரி — ஏகப்பட்ட பிரச்சனைகள் தலைகாட்டுகின்றன.

முக்கியமாக, ஒரு விஷயத்தை இப்படித்தான் செய்யவேண்டும் என்று சேணம் கட்டிய குதிரைப்போல் ஒரு பார்வை அமைந்துவிடுவதால், அதன்பிறகு வேறு எந்தவிதத்திலும் அதைச் செய்யத் தோன்றுவதில்லை.

தொடரும்...

**Congratulations to our Tiaano children, who are all scored above 85% in $10^{th}$ and $12^{th}$ Examination results, 2013.**



### Heros from Tiaano

| Serial Number | Name | Parents Name | Education | Percentage |
|---|---|---|---|---|
| 1 | Master. Ruben Jeyakumar. S | **Mr. SounderSuresh. C**<br>Mrs. Vimala. S | $10^{th}$ | 96% |
| 2 | Miss.Kirubavathi. S | **Mr. Sekar. E**<br>Mrs. Kasthuri. S | $10^{th}$ | 94% |
| 3 | Miss. Nivetha. B | **Mr.Balasubramanian.K.G**<br>Mrs. Padmavathy.B | $10^{th}$ | 93% |
| 4 | Master. Gopi. G | **Mr. Gnanasekar. G**<br>Mrs. Santhi. G | $10^{th}$ | 87% |
| 5 | Miss. Nivetha Jenifer.J | Mr. Jesudhas. T<br>**Mrs. Jayalatha. T** | $10^{th}$ | 87% |
| 6 | Master. Parthasarathy. R | **Mr. Raveendran. T**<br>Mrs. Ponnarasi. R | $10^{th}$ | 86% |
| 7 | Miss. Sujitha Jenifer. J | Mr. Jesudhas. T<br>**Mrs. Jayalatha.T** | $12^{th}$ | 86% |